1978 மார்ச் 15]

திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆளியாறு போன்ற அணைக்கட்டுகளி லிருந்து இன்றைய தினம் கூட நாள் ஒன்றுக்கு ஒரு விநாடிக்கு 60 கன அடி தண்ணீர் தமிழ்நாடு அரசிடமிருந்து கேரளா அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மேற்கு நோக்கி கடலில் போய் விழுகிற அந்தத் தண்ணீரை பரம்பிக்குளம், ஆளியாறு, திருமூர்த்தி நகர் ஆகியவைகளுக்குக் கொண்டு வருவதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்தி அந்தத் தண்ணீரை இங்கே திருப்பி விடுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் தற்போது அது இடம் பெறவில்லை.

*570 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து மைசூருக்கு மின் சப்ளை செய்வது குறித்து கேரளா அரசு தமிழ்நாடு அரசிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) கேரளா அரசு தன்னுடைய 5–10–1977 தேதியிட்ட கடிதத்தில் தமிழ்நாடு கேரளா மின் விசையை கர்நாடகத்துடன் பகிர்ந்து கொள்வது பற்றி குறிப்பிட்டு அத்தகைய ஏற்பாடு மூன்று மாநிலங்களின் ஒப்புதலின் பேரில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: கேரளத்திலிருந்து இப்படி மின்சாரத்தை பெறும்போது அதற்காக நாம் வழங்குகின்ற விலையையும் அதே நேரத்தில் அதை நாம் கர்நாடகத்திற்கு விற்கும்போது அதற்காக நாம் வாங்குகிற விலையையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரளத்திலிருந்து பெறுகிற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 12 1/2 பைசா கொடுக் கிறோம். கர்நாடகத்திற்கு அதைத் தருகிறபோதும் 12 1/2 பைசா தான் வாங்குகிறோம். ஆனால் மின்சாரத்தை அனுப்புகிறபோது 10 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ் வழியில் ஏற்படுதல், மின்சார அளவு காட்டப்படுகிறது.

திரு. க. அன்பழகன் : கர்நாடகத்திற்கு மின்சாரம் வழங்க இசைந்ததற்குப் பின்னர் அதுபற்றி கேரள அரசு தெரிவித்த மறுப்புக்கு நம்முடைய அரசு தெரிவித்திருக்கிற பதில் என்ன ?

இப்படி மின்சாரத்தை வழங்குவது கர்நாடக அரசாங்கத்திற்கு தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட பிரச்னைக்காக மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் நமக்கு முறையாக கிடைக்கிற காவிரித் தண்ணீர் கிடைக்காமல் போய் அதை கிடைக்கச் செய்வதற்காக இடையில் செய்யப்பட்ட சலுகை போல் மின்சாரம் வழங்கப் படுகிறது என்றும் சொல்வதைப் பற்றி அரசு என்ன கூறுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரண்டு கேள்விகள் இருக்கின்றன. முதலாவது, கேரளாவிலே உற்பத்தியாகிற உபரி மின்சாரத்தைத் தமிழகம் பெற்றுக் கொள்வது என்று 12-2-76-ல் ஒப்பந்தமாகியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி நாம் மற்ற மாநிலங்களுக்கு அந்த மின்சாரத்தைக் கொடுக்கக்கூடாது என்று எந்தவிதத் தடையும் இல்லை. கேரள மாநிலத்திற்கு நான் சென்ற போது அங்குள்ள மின்சார அமைச்சரிடம் இதுபற்றிப் பேசினேன். அவர்களும் நம்முடைய நிலையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கர்நாடகத்திற்கு நாம் மின்சாரம் வழங்குவதில் அவர்களுக்கு எந்த தடங்கலும் இல்லை. ஆனால் 12-10-1977ல் அவர்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது—கர்நாடக அரசும் கேரளத்திலிருந்து உபரி மின்சாரத்தைத் தங்களுக்கு தர வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகையால் இதுகுறித்து மூன்று மாநிலங்களும் முடிவு செய்து கொண்டால் நன்றாக இருக்கும். நீங்களும் எங்களிடமிருந்து வாங்கி கர்நாடகத்திற்கு தருவது நாங்களும் நேராகத் தருவது என்ற நிலைமையை மாற்றி எந்த வகையில் கொடுப்பது என்பது பற்றி முடிவு செய்யலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். நாம் ஏற்கனவே செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தம் 1979ஆம் ஆண்டு வரை உள்ளது. ஆகவே, எந்த அளவுக்குப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற வகையில் கேரளா அரசோடு பேச வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இரண்டாவது, கர்நாடகத்தை பொறுத்தவரை காவிரித் தண்ணீருக்காக இந்த மின்சாரம் வழங்கப்பட்டது என்ற கருத்து சரியானதல்ல. உண்மை என்னவென்றால் 23-3-1976 ஆளுநர் ஆட்சி காலத்தில் மத்திய அரசு கர்நாடக மாநிலத்திற்கு அங்குள்ள—குறிப்பாக டிபென்ஸ் இண்டஸ்டீரிஸ் — பாதுகாப்புத் தொழிற்சாலைக்குப் போதிய மின்சாரம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் கூடுதலாக மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கொடுத்து வந்தார்கள். அன்றைக்கு இருந்த ஆளுநர் ஆட்சி கேரளாவிலிருந்து பெறுகிற மின்சாரத்தில் 50 சதவிகிதம் அல்லது நாள் ஒன்றுக்கு ஒருமிலியன் யூனிட் வரையில் தரமுடியும், அதற்கு மேல் தரமுடியாது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே மின்சார வாரியம் ஒரு மிலியன் யூனிட்டை நாள் ஒன்றுக்கு தந்து வந்தது.

ஆனால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஒரு மிலியன் யூனிட் தரவில்லை. 0·4 மிலியன் யூனிட்தான் தந்தார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நானும் அங்கே சென்ற

1978 மார்ச் 15] [திரு. ச. இராமச்சந்திரன்]

போது 'நீங்கள் ஏற்கனவே சொன்ன உறுதிமொழிப்படி ஒரு மிலியன் யூனிட் தரப்படவில்லை ; ஒரு மிலியன் யூனிட் தருகிறேம் என்று சொன்ன உறுதிமொழியை நீங்கள் காப்பாற்றத் தவறுவது சரிதானு, என்று அவர்கள் கேட்டபோது ஒரு மாநிலத்தி லுள்ள அரசு இன்னெரு மாநில அரசுடன் உடன்பாட்டுக்கு வரு கிறபோது அந்த உடன்பாட்டை நிறைவேற்றுவது மாநிலங்களி டையே நல்ல உறவை வளர்க்கக்கூடிய வகையில் இருக்கும்— அதாவது கமிட்மென்ட். அந்த வகையில்தான் 0·4 மிலியன் தந்த நிலை மாறி ஒரு நாளைக்கு ஒரு மிலியன்யூனிட் என்ற அளவில், முதலில் எப்படி ஒத்துக் கொண்டார்களோ அதே அளவில் தரப் பட்டதே தவிர வேறல்ல.

கடந்த மாதத்தில்கூட மத்திய அரசிடம் இருந்து மேலும் ஒரு தாக்கீது வந்தது. அங்குள்ள தொழிற்சாலைகளுக்குப் போதிய அளவு மின்சாரம் கிடைக்கவில்லை, கர்நாடகத்தில் மின்வெட்டு அதிகமாக இருக்கிறது, உங்களால் முடிந்தால் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆனுல் நம் முடைய நிலைமையைப் பொறுத்தவரை பரிசீலித்த பிறகு தர இயலாத சூழ்நிலையில் இருக்கிறேம் என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களிடையே நல்ல உறவும் மத்திய சர்க்காரிடத்திலே ஒரு சுமுகமான நிலைமை யையும் ஏற்படுத்துவதற்கு இது போன்ற காரியங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, இலங்கையிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு வாய்ப்பு மிக எளிதாக இருப்பதாகவும் அப்படி மின்சாரம் பெற்ருல் அது இராம நாதபுரம், மதுரை மாவட்டங்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்கும் என்ற கருத்து நிலவுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா ? அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

பூம்புகார் கலைக்கூடம்.

* 571 வினு திரு. என் கிட்டப்பா ; மாண்புமிகு செய்தி—சுற்று லாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ; பூம்புகார் கலைக்கூடத்தைக் காணவருவோரிடமிருந்து நாள்தோறும் வசூலாகும் தொகை சராசரியாக எவ்வளவு ?